யின் கரை ஓரத்தை இணைக்கும் சுவர்களுக்கு இடையில் நிரப்பப் பட்ட மணல் தண்ணீரின் வேகத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந் தது. எனவே தாம்போதியின் மேல்தளத்தில் போடப்பட்ட கான்கிரீட் உடைந்து விட்டது. இதனால் போக்குவரத்து தடைப் பட்டது. உடனடியாக நடவடிக்கை எடுத்து 21—6—1972 முதல் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது.

(உ) 1965-ம் வருடம் இந்த வேலை கட்டிமுடிக்கப்பட்டது.

திரு. க. உரொ. எட்மண்ட்: இப்பேர்ப்பட்ட சூழ்நிலைகள் இனிமேல் உருவாகாமல் இருக்கும் வகையில் இருபக்கமும் கரை களைப் பலப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எதிர்பாராமல் ஏற்பட்டது என்று சொன்னேன். எதிர்பாராமல் ஏற்படுவதற்கு இப்போதும் உறுதியளிக்க முடியாது.

Dhobykhana at Saidapet.

* 592 *Q*.—THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Dhobykhana constructed with Government loan and grant at Saidapet is lying in a dilapidated condition; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: I am very sorry this reply is given. There is a Dhobykhana in Saidapet which is in a dilapidated condition. I do not know how the Hon. Minister got this answer from the Department. It is lying idle for the last ten years. I only request, through you, Sir, the Hon. Minister may go and inspect the place. I am prepared to go with him.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் சலவை செய்யும் இடமானது அரசு கடன் உதவியோ, மானியமோ பெற்றுக் கட்டப்பட்டது அல்ல. அது பூராவும் மாநகராட்சி நிதியிலிருந்து கட்டப்பட்டது. 1959-60-ம்

[1973 டிசம்பர் 3]

ஆண்டுக்கான மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தில் சைதாப்பேட்டை ரிச்சர்டு பூங்கா கிணற்றிலிருந்து சலவையாளர் கிணற்றுக்குத் தண்ணீர் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் சலவைத் தொழிலாளர்கள் கீழ்ப்பாக்கம் நீர்நிலையத்திலிருந்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும், துணிகளைப் பாதுகாக்க சுற்றுச் சுவர் வைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டு மாநகராட்சி வரவு செலவுத் திட்டத்தில் அடுத்த வருஷம் தகுந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது சுற்றுச் சுவர் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்பந்தத்தில் சில தடைகள் ஏற்பட்டு ஒருவாறு கட்டி முடிக்கப்பட்டது. புயலால் ஆர்.சி. கூரைகள் பாதிக்கப்பட்ட நேரத்தில் தங்க வசதியின்றி வீடின்றி இருந்தவர்கள் அந்தக் கட்டடத்தில் குடிபுகுந்தனர். மிக்க சிரமத்தோடு அங்கு தங்கியிருந்த மக்கள் அகற்றப்பட்டார்கள். தண்ணீர்ப் பற்றுக்குறையின் காரணமாக கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திலிருந்து தண்ணீர் வசதி அளிக்க இயலாத நிலை இருந்தது. இப்போது தண்ணீர் வசதியில் முன்னேற்றம் ஏற்பட்டு தற்போது தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அதைப் பற்றிக் குறிப்பில் இருப்பதைச் சொல்லியிருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் பார்வையிடத் தயாராக இருக்கிறேன்.

திருப்புவனம் ஒன்றிய அலுவலர்களுக்குக் குடியிருப்புகள்.

***593 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் அருகில் அலுவலர்களுக்கு 1973-74-ல் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா: திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் அலுவல் செய்யும் அலுவலர்கள் வீடு வாடகைக்கு கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். வேறு சில ஊராட்சி ஒன்றிய அலுவலர்